**MCOP NO:7195/2018** **DATE: 07.08.2025**

ம.சா : 1

பெயர் : திருமதி. சித்ராசெல்வி (எ) சிந்தனைசெல்வி

த/பெ : திரு. தமிழ்முருகன்

வயது : 57

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து காண்பித்தார் கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 9 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் திருநெல்வேலியிலிருந்து பேருந்தில் வந்தேன். விபத்து சமயத்தில் நான் பேருந்தின் முன் இருக்கையில் அமர்ந்திருந்தேன். பேருந்து தான் 3-ம் எதிர்மனுதாரரின் லாரியின் மீது மோதியதால் தான் இந்த விபதது ஏற்பட்டது என்றால் சரியல்ல. பேருந்திற்கும், லாரிக்கும் இடையில் இடைவெளி இல்லாமல் பேருந்தை ஓட்டிய ஓட்டுநர் ஓட்டிச்சென்றார் என்றால் சரிதான். அதனால் பேருந்து ஓட்டுநரின் அஜாக்கிரதையால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. பேருந்து ஓட்டுநர் தான் முன்னால் சென்ற லாரிக்கு பின்னால் இடைவெளி இல்லாமல் சென்றதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் அவ்வாறு இல்லை. மசாஆ 6-ல் உள்ள மருத்துவ பில்களுக்கு பரிந்துரைச்சீட்டு இல்லாததால் அந்த மருத்துவ செலவுகளுக்காக காட்டப்பட்டுள்ள தொகைகளை நான் பெற முடியாது என்றால் சரியல்ல. நான் டெய்லராக பணி செய்து வந்தேன் என்பதை காட்டுவதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் மாதம் ரூ.15,000/- சம்பாதித்து வந்தேன் என்பதை காட்டுவதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை. நான் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு தொடர் சிகிச்சை பெற்றதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தில் எனகது ஏற்ட்ட காயங்கள் அனைத்தும் சாதாரண காயங்கள் என்பதால் தான் நான் தொடர் சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லைஎன்றால் சரியல்ல. எனது முதல் பிரமாண பத்திரிக்கையில் பத்தி 10-ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் அதிக இழப்பீடு பெற வேண்டி மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தில் எனகது ஏற்ட்ட காயங்கள் அனைத்தும் சாதாரண காயங்கள் என்பதால் எனக்கு வருமான இழப்பு மற்றும் வருமான திறன் இழப்பு ஏற்படவில்லை

என்றால் சரியல்ல. விபத்தானது முதல் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டியின் அஜாக்கிரதையால் ஏற்படவில்லை என்பதால் 2-ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவரல்ல என்றாலும், 3-ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது என்பதால் நான் ஏதாவது இழப்பீடு பெற வேண்டும் என்றால் 3 மற்றும் 4-ம் எதிர்மனுதாரர்களிடமிருந்து தான் இழப்பீடு பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால் சரியல்ல.

**4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்தானது 08.10.2018-ல் அன்று இரவு 12.45 மணிக்கு நடந்தது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் நான் சென்னையிலிருந்து திருநெல்வேலிக்கு பயணம் செய்து கொண்டிருந்தேன். மேற்படி நான் பயணம் செய்த வாகனம் தேசீய நெடுஞ்சாலையில் தான் சென்றது. நான் பயணம செய்த வாகனத்திற்கு முன்னால் சென்ற லாரியானது திடீரென்று இடது புறம் திரும்பியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்து ஏற்பட்டவுடன் முதலில் என்னை விபத்து ஏற்பட்ட இடத்திற்கு அருகில் உள்ள அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள், அங்கு ஒரு நாள் சிகிச்சை பெற்றேன். 5 நாட்களாக ஃபார் ஆர்த்தோ மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுக்கொண்டேன். எனக்கு அந்த மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்த தேதி எனக்கு நியாபகம் இல்லை. பின்னிட்டு அந்த மருத்துவமனையிலிருந்து நான் விடுவிப்பு செய்யப்பட்டேன், அது மசாஆ 4-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு 23.05.2022-ம் வருடம் மீண்டும் நான் அறுவை சிகிச்சை செய்து கொண்டேன். 24.05.2022-ம் தேதி எனக்கு பொறுத்தப்பட்ட பிளேட்டானது எடுக்கப்பட்டது. 26.05.2022-ம் தேதி நான் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டேன், அது மசாஆ 5 ஆகும். அந்த ஆவணத்திற்கு உண்டான மருத்துவ பில்கள் தாக்கல் செய்துள்ளேன் அது மசாஆ 6 ஆகும். விபத்து லாரியின் அஜாக்கிரதையால் ஏற்பட்டது. எனக்கு ஏற்பட்ட விபத்தானது முதல் எதிர்மனுதாரர் பின்னால் வரும் வாகனத்திற்கு முறையாக சமிக்கை செய்யாமல் திடீரென்று இடது புறம் திரும்பியதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.